### மோட்டார் விபத்துக்கள்

*414 கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் 1962-63-ல் நடைபெற்ற மோட்டார் விபத்துக்கள் எத்தனை?

(இ) அவ்விபத்துக்களில் மாண்டவர்கள் எத்தனைபேர்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** (அ) 7,914.

(இ) 841.

**திரு. செ. கோ. விஸ்வநாதன்:** விபத்துக்களைத் தடுக்க சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? விபத்துக்கள் அதிகமாக ஏற்படக்காரணம் காலையில் 8 மணிக்கெல்லாம் லாரிகள் வந்து சேர வேண்டுமென்பதாலா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** விபத்தைத் தடுப்பதற்காக என்று 17 இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறோம். அது அச்சடிக் கப்பட்டு நம்முடைய சபையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. விபத்துக்கள் சாதாரணமாகத் தவிர்க்க முடியாதது. தற்போது பெரிய அளவு விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்ல முடியாது. விபத்துக்கள் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம், 'ஸ்ட்ரே கேட்டில்' 'ஸ்ட்ரே டாக்ஸ்' குறுக்கே ஓடும்போது அதைத் தவிர்ப் பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிதான். இது நம் முடைய நாட்டினுடைய நிலைமையை ஒட்டி இருக்கிறது.

### லாரி விபத்துக்கள்

*415 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1962 ஜனவரி முதல் டிசம்பர் வரை தமிழ் நாட்டில் ஏற்பட்ட லாரி விபத்துக்கள் எத்தனை?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** 2,688.

**திரு. ஆ. தங்கவேலு:** கனம் தலைவர் அவர்களே, 1961-ம் ஆண்டைவிட, 1962-ம் ஆண்டில் லாரி விபத்து அதிகமா? குறைவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** இந்த மாதிரி விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் லாரிகளை ஓட்டும் வேகமாகும். தற்போது அரசாங்க பஸ்கள் 30 மைல் வேகத்திற்கு மேல் செல்லக் கூடாது என்று 'சீல்' செய்திருப்பதுபோல் லாரிகளுக்கும் செய்ய முன் வருவார்களா?

21st November 1963]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த யோசனை சற்றேறக் குறைய கடந்த பத்தாண்டுகளாகப் பரிசீலிக்கப்பட்டு வந்திருக் கிறது. சில சமயங்களில் விபத்தைத் தடுக்க வேகமாகவும் ஓட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி 'சீல்' செய்து விட் டாலும் விபத்து ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகை யால்தான் இந்த 'சீல்' செய்யப்படவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** விபத்தில் பாதிக்கப்பட்டவரு டைய குடும்பத்திற்குச் சர்க்கார் உதவி செய்கிறதா? அல்லது விபத்தை உண்டாக்கியவரிடம் இருந்து உதவி பெறப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்கென்று தனியாக ஒரு சட்டம் இருக்கிறது. அதன் பிரகாரம் காம்பென்சேஷன் கொடுக் கப்பட்டு வருகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மோட்டார் விபத்துக்கள் அதிக மாக இருப்பதன் காரணமாக இறக்கின்றவர்கள் தொகை அதிக மாக இருக்கிறது என்ற காரணத்தால் மோட்டார் சட்டத்தைத் திருத்தி குறைந்தபட்ச தண்டனையை அதிகமாக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** விபத்துக்கள் ஏற்படுவ தெல்லாம் தனிப்பட்ட ஒருவருடைய தவறினால்தான் என்று நினைப்பது சரியல்ல. தவிர்க்க முடியாதபடி விபத்துக்கள் ஏற் படும்போதெல்லாம் யார் மீது குற்றம் இருந்தாலும் சரி, மோட் டார் ஓட்டுபவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொன்னால் போக்குவரத்து வளர்ச்சியடைய முடியாது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர் களே, லாரிகளின் மூலமாக ஏற்படும் விபத்துக்களுக்குக் காரணம் லாரி டிரைவர்களுடைய தூக்கமின்மையும், நீண்ட தொலைவு, 300, 400 மைல்களுக்கு மேல் ஒரே டிரைவரே ஓட்டிச் செல்ல வேண்டிய நிலைமையுந்தான் என்று சொல்லப்படுகிறது. இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒரு தொழிலாளி எத்தனை மணி நேரம் ஓட்டவேண்டும் என்பதற்கெல்லாம் சட்டம் இருக் கிறது. அதை மீறி ஓட்டுகிறார்கள் என்றால் அவர்கள் மீது நட வடிக்கை எடுக்க முடியும். தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் பட்ட உரிமைகளையெல்லாம் அவர்கள் தங்களுடைய சங்கங்களின் மூலமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதற்கு என்று சர்க்கார் இன்ஸ்பெக்டரைப் போட்டுக் கண்காணிக்க முடியாது.

*Bridge across South Pennaiar*

* 416 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the public of Arasampatty village in Krishnagiri taluk have requested the Government for the construction of a bridge across the South Pannaiar near Arasampatty village in the Arasampatty-Thattarahally road, originally called as Barur-Avathuvady road in Salem district: and